# முன்னுரை

பாரதம் இன்று மிகுந்த உணவுப் பற்றாக்குறையினால் அவதிப் படுகிறது. கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளாக, பாரதத்தில் மனித நுகர்வுக்கென கிடைக்கப்பெறும் உணவு தானியங்களின் அளவு பிரிட்டிஷ் ஆட்சியினர் பஞ்சகால நிலைமையைத் தவிர்க்கத் தேவையான குறைந்த பட்ச உணவு என மதிப்பிட்ட, ஒரு மனிதருக்கு ஆண்டொன்றிற்கு சராசரி 200 கிலோ என்ற அளவை விட குறைவாகத் தான் இருந்து வருகிறது. உண்மையில், இந்நாடு பிரிட்டானிய ஆட்சி தொடங்கிய சில பத்தாண்டுகளுக்குள்ளாகவே கிட்டத்தட்ட பஞ்ச நிலையை அடைந்து விட்டது. அன்று முதல் இன்று வரையிலும் நாம் அதே நிலையிலேயே தங்கியுள்ளோம்.

இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கப்பெறும் அடிப்படை உணவுப் பொருட்களின் அளவு, அதாவது, உணவு தானியங்கள் மற்றும் கிழங்கு வகைகளின் அளவு நம் நாட்டை விட குறைந்த பட்சம் இரு மடங்காவது அதிகமாக உள்ளது. இன்னும் அதிக செல்வங்கொழிக்கும் நாடுகளில் நம்மை விட நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாகவே அடிப்படை உணவுப்பொருட் கள் கிடைக்கின்றன. இதன் விளைவாக, பாரத மக்கள் உலகின் எந்த பகுதியில் உள்ள மக்களை விடவும் சுமார் மூன்றில் ஒரு பங்கு குறைவாகத்தான் அடிப்படை உணவுப் பொருட்களை நுகர்கிறார்கள். தவிரவும் பாரதத்தின் கால்நடைகளுக்கும் இதர விலங்கினங்களுக்கும் தானியங்களோ, கிழங்குகளோ ஒரு சிறிதளவும் கிடைப்பதில்லை என்றே கூறலாம்.

பாரதம் எக்காலத்திலும் இம்மாதிரியான நிலையிலேயே இருந்து வரவில்லை. ஏன், வெறும் ஒரு 200 ஆண்டுகளுக்கு முன்பு கூட, சென் னையை அடுத்துள்ள சற்று வறண்ட கடலோரப் பகுதிகளாய் விளங் கும் செங்கல்பட்டு மாவட்டத்தில் மக்கள் நிலத்திலிருந்து அமோக மான விளைச்சலை ஈட்டியதால் ஒவ்வொருவருக்கும் சராசரி ஒரு டன் அளவிலான உணவு தானியங்கள் கிடைத்து வந்தன. இன்றோ நாம் இதில் ஐந்தில் ஒரு பங்கே நமக்குப் போதும், இதை விட அதிக

அளவை விளைவிக்கவோ விநியோகிக்கவோ நம்மால் இயலாது என்று எண்ணத் தொடங்கியுள்ளோம்.

பொது விவகாரங்களில் ஈடுபட்டுள்ளோருக்கும் மற்றும் புள்ளி விவரங்களை ஆராய்வோருக்கும் நம்முடைய இந்த நெருக்கடியான நிலைமை நன்கு தெரிந்ததே. புள்ளிவிவரங்களைக் கையாளாதவருக்கும் அல்லது அதில் நம்பிக்கை கொள்ளாதவருக்கும் கூட பாரதத்தில் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் பசிப்பிணி கண்கூடாக காணக் கூடியதாய் உள்ளது. ஆயினும் நாம் தேவைக்கு அதிகமான உணவு உற்பத்தி செய்வதாகவே எண்ணத் துணிந்துள்ளோம்.

ஒரு நாட்டில், மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் அடிப்படை பிரச்சினைகளைப் பற்றி இவ்விதமான உணர்ச்சிகள் உறைந்து போன நிலைமை உண்டாகியதெனில், தற்பொழுது தேவையானது ஆழ்ந்த ஆத்ம சோதனையே; மனித வாழ்க்கைக்கும் நாட்டின் உயிர் நாடிக்கும் எது அடித்தளமாய் விளங்குவது, எது தற்செயலாய் கொள்ளத்தக்கது என்பதைப் பற்றிய பாரதீய சனாதன உணர்வின் அடிப்படைக் கருத்துகளை நோக்கிய ஆழ்ந்த சிந்தனையே. இப்புத்தகம் இந்த ஆத்ம சோதனைக்கு உதவும் நோக்குடன் ஆக்கப்பட்டுள்ளது.

பாரதத்தினர் எக்காலத்திலும் அமோகமான உணவைப் பெருக்கி அதைத் தாராளமாகப் பலருடன் பகிர்ந்து உண்ணுதலையே மனித வாழ்க்கையின் அடிப்படைத் தருமமாய்க் கருதி வந்துள்ளனர். அன்னமும் அன்னதானமுமே அடிப்படையாம். மற்றனைத்தும், ஏன், பாரதத்தினர் எப்பொழுதும் அடைய விழையும் இறுதிப் பேறாம் மோக்ஷத்தின் நாட்டமும் கூட இதன் அடிப்படையிலேயே சாத்தியமாகும்.

இப்புத்தகத்தில் நாம் பாரதத்தினர் உணவையும் பகுத்துண்ணுதலையும் பற்றி எத்துணை ஆழமான கருத்துகளைக் கொண்டிருந்தனர் என்பதை ஓரளவிற்குக் காண முயன்றுள்ளோம். அன்னம் மற்றும் அன்னதானத்தைப் பற்றிய இந்த ஆய்விற்கு, நாங்கள் பாரதத்தின் பண்பாட்டு மாண்புலத்தை எடுத்தியம்பும் மிகச் சிறந்த இலக்கியங்களெனப் போற்றப்படும் சுருதி, இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் தரும சாஸ்திரங்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளோம்.

பாரத பூமி மிகுதியான இயற்கை வளத்தை வரமாகப் பெற்றுள்ளது. மீண்டும் நாட்டின் கவனம் இந்த வளமான நிலங்களின் மீது சென்றதேயெனில் நம் சீரிய வேளாண் மக்கள் இச்செழிப்பான பூமியிலிருந்து அமோகமான அன்னப் பெருக்கத்தை ஏற்படுத்தி நாட்டின் மக்களையும், மாக்களையும் பசிப்பிணியிலிருந்து மீட்டு பாரதம் மீண்டும் தன் பண்பாட்டு மாண்புலத்தையும் சிறப்பையும் அடைய வழிகோலுவர் என்பது உறுதி. நம்மிடமுள்ள வெறுமையாவது

இயற்கை வளத்திலோ, தொழில்நுட்பத்திலோ அன்றி நிர்வாகத் திற மையிலோ அல்ல. ஆயின் உணவுப் பெருக்கத்தைப் பற்றிய ஒரு திட மான சங்கல்பத்தை மேற்கொள்வதிலேயே உள்ளதென்று கூறலாம். இப்புத்தகம் நம் நாட்டின் சித்தத்தை மீண்டும் அன்னத்தின் மீது ஒரு முகப்படுத்த உதவும் என்று நம்புகிறோம். மேலும் இப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள பல மேற்கோள்களும், தொடர்புள்ள கதைக ளும் நம் சிறுவர்களுக்குச் சனாதன பாரதீய சிந்தனையின் அடிப்படைக் கருத்துகளை அறிமுகப்படுத்த உதவும் என்றும் நம்புகிறோம்.

பாரதநாட்டு மக்களைப் பொறுத்தவரை, உணவைப் பெருக்குவ தும் பகிர்ந்துண்ணுவதும் வெறும் பொருளாதாரப் பிரச்சினையாக மட்டுமின்றி தார்மீக வாழ்க்கையின் அடிப்படையாகவே விளங்குவ தால், நாங்கள் இப்புத்தகத்தை இன்றைய பாரதத்தின் சில தலைசிறந்த ஆசாரியர்களின் பாதங்களில் சமர்ப்பித்துள்ளோம். இம்மகான்கள் இம்முயற்சியை ஆசீர்வதித்து, பாரதம் வெகு விரைவில் அன்னப் பெருக்கம் மற்றும் அன்னதானம் என்னும் தருமத்தில் மீண்டும் நிலை பெற ஆசிகள் வழங்கியுள்ளமை நாம் பெற்ற பேறாகும். ஆசாரியர்கள் பலரும் அருள் கூர்ந்து இப்புத்தகத்தை படித்ததுடன் தம் மங்களாசாஸ னங்களையும் வழங்கியுள்ளனர். அவற்றின் ஸம்ஸ்க்ருத மூலமும், தமிழ் மொழிபெயர்ப்பும் இப்புத்தகத்தின் தொடக்கத்தில் உள்ளன. புண்ணிய ஸ்தலமான திருமலையில் ஸ்ரீதாத்ரு வருஷம் புரட்டாசி மாதம் 23 ஆம் தேதி (9.10.1996) அன்று இவ்விஷயத்தைப் பற்றி நடைபெற்ற சிறப்பான தர்மஸதஸ்ஸில் இப்புத்தகத்தின் ஹிந்தி மற்றும் ஆங்கில மூலப் பதிப்புகளை வெளியிட்டு ஆசாரியர்கள் தம் ஆசிகளையும் வழங்கியுள்ளனர். இம்முயற்சியைப் புனிதப்படுத்திய மைக்கு ஆசாரியர்களின் தாள் பணிந்து எமது நன்றியையும் வணக்கத் தையும் சமர்ப்பிக்கிறோம்.

இந்நூலின் ஆக்கத்திற்கு பலர் உறுதுணையாக இருந்தனர். ஒவ்வொரு கட்டத்திலும் முக்கியமாக எங்களுக்கு ஊக்கமளித்த எமது நெருங்கிய நண்பர்களான திரு.பன்வாரி அவர்கள், திரு.கா.வே.வரத ராஜன் அவர்கள் மற்றும் திரு.ஸா.குருமூர்த்தி அவர்களுக்கு எங்கள் பிரத்யேக நன்றி உரித்தானது. நாங்கள் பேராசிரியர் திரு.ரா.கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் மற்றும் திரு.கி.இராமசுப்பிரமணியன் அவர்களி டம் ஸம்ஸ்க்ருத மூல ஆதாரங்களை ஆராயவும், அறியவும் வேண்டி பலமுறை அணுகியுள்ளோம். இவர்களுக்கு எம் மனமுவந்த நன்றி. எங்களது துணைவியர் திருமதி குஸும் பஜாஜ் மற்றும் திருமதி விஜயலட்சுமி ஸ்ரீநிவாஸ் இப்புத்தகத்தின் முதல் படிவங்களைப் படித்து, இப்பணி முடியும் வரையில் எங்களுக்கு உறுதுணையாக

இருந்தனர். இவர்கள் அளித்த ஒத்துழைப்பால் இப்பணி எங்களுக்கு இனியதொரு அனுபவமாக இருந்தது.

இப்புத்தகத்தின் தமிழாக்கத்தைத் திருமதி விஜயலட்சுமி ஸ்ரீநிவாஸ் செய்துள்ளார். அவருக்கும், இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பை நுணுக்கமாக ஆராய்ந்து பிழைகளைத் திருத்தவும், பயனுள்ள மாற்றங்கள் செய்யவும் உதவிய தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.த.கோ.பரமசிவம் அவர் களுக்கும், திரு.ஜெயராமன் ஸ்ரீநிவாஸன் அவர்களுக்கும், தமிழ் இந்தியா டுடேயைச் சேர்ந்த திரு.அரவிந்தன் அவர்களுக்கும் நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இப்புத்தகத்தில் ஸம்ஸ்க்ருத சொற்கள் பெரும்பாலும் சென்னைப் பல்கலைக்கழகத்தால் பதிப்பிக் கப்பட்டுள்ள தமிழ் அகராதியில் உள்ளவாறு வழங்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தின் ஆங்கில மற்றும் ஹிந்தி பதிப்புகளில் அன்னப் பெருக்கம் மற்றும் பகிர்ந்துண்ணுதல் என்னும் பாரதீய சனாதன தரு மம் புராதன இலக்கியங்களான வேதங்கள், இதிகாசங்கள் மற்றும் தரும சாஸ்திரங்களை ஆதாரமாய்க் கொண்டு விவாதிக்கப் பட்டுள்ளது. நம் சனாதன பாரதப் பண்பாடு உணவைப் பெருக்கி ஈத்துண்பதனையே ஆதாரமாய்க் கொண்டுள்ளது என்பது தமிழ் இலக்கியத்திலும் மிக விரிவாகவும் உறுதியாகவும் விளக்கப் பட்டுள்ளது. இப்பொருள் பற்றி ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டு தனியோர் புத்தகத்தைத் தொகுத்தளிப்பது இன்றியமையாததாகும். இப்புத்தகத்தின் அனுபந்தத்தில் அன்னப் பெருக்கம் மற்றும் பகிர்ந்துண்ணும் சனாதன பாரத தருமம் பண்டைய தமிழ் இலக்கியத்தில் எத்துணை தெளிவாகவும் சிறப்பாகவும் வருணிக்கப்பட்டுள்ளது என்பது சில மேற்கோள்களின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்த அனுபந்தத்தைத் தொகுத் தளிப்பதில் உதவிய தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.த.கோ.பரமசிவம் அவர்களுக்கு மீண்டும் நம் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகத்தின் அச்சுக் கோப்புக்கு உதவிய அனு கிராபிக் ஸிஸ்டம்ஸ் நிறுவனத்தாருக்கும், சிறப்பான முறையில் புத்தகத்தை அச்சடித்தமைக்கு எம்.டபிள்யூ.என் அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***சென்னை***
***ஈச்வரஸம்வத்ஸரம், புரட்டாசி 15***
***கலியப்தம் 5100, விஜயதசமி***
***1.10.1998***